அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 11/2013

எனது இலக்கம் : EST-7/LEAVE/03/3221
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2013.07.02

அமைச்சின் செயலாளர்கள்
மாகாண சபை பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 22 ஆம் பிரிவினைத் திருத்துதல்.**

தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 22 ஆம் பிரிவின் மீது தங்கள் அவதானம் ஈர்க்கப்படுகின்றது.

02. மேற்படி பிரிவின் 22:7 ஆம் உப பிரிவுக்கு அடுத்து அரச அலுவலர் ஒருவரின் பிள்ளை ஒன்றின் அல்லது வாழ்க்கைத் துணையின் சுகயீனம் ஒன்றுக்காக சம்பளமற்ற விடுமுறையினை பெற்றுக்கொடுக்கும் ஏற்பாடுகள் உட்சேர்க்கப்பட்டு தாபன விதிக்கோவையினைத் திருத்துவதற்கு 2013.05.09 ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. அதற்கமைய 22:8 மற்றும் 22:8:1 என புதிய உப பிரிவுகள் 02 இனை கீழ்வருமாறு சேர்த்து தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 22 ஆம் பிரிவு திருத்தம் செய்யப்படுகின்றது.

22:8 அரச அலுவலர் ஒருவரின் திருமணமாகாத பிள்ளை ஒன்று அல்லது வாழ்க்கைத் துணை சுகயீனமுற்றதன் அடிப்படையில் அரச வைத்தியசாலை ஒன்றின் வைத்திய நிபுணர் ஒருவரின் பரிந்துரைக்கமைய மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக ஆகக்கூடியது ஒருவருடம் வரை சம்பளமற்ற விடுமுறையினை உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் கழிப்பதற்காக அனுமதியினை வழங்க முடியும்.

22:8:1 தாய் மற்றும் தந்தை இருவருமே அரச அலுவலர்களாயின் நோயுற்ற பிள்ளையினைப் பராமரிப்பதற்காக மேற்படி 22:8 இல் குறிப்பிடப்பட்ட இருவரில் ஒரு அலுவலருக்கு மாத்திரமே விடுமுறையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஒப்பம்/ பி.வீ.அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு